C.C.No. 11909/ADW.2/2014

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – பள்ளிகள் –2014–15ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பு – ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதி மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 2) துறை

அரசாணை (நிலை) எண்: 13 நாள் : 28.01.2015

ஜய – தை 14 திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:-

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம் ந.க. எண்.
த3/22930/2014, நாள் 20.10.2014.

******

**ஆணை :**

2014–15ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயன்பாட்டில் உள்ள குழல் விளக்கு, மின் விசிறி மற்றும் தண்ணீர்க்குழாய் ஆகியவற்றினை பராமரிக்க ஒரு விடுதிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.15,000/– வீதம் 1647 விடுதிகளுக்கு ரூ.2.47 கோடி வழங்கப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல இயக்குநர், இத்துறையின் கீழ் 1304 ஆதிதிராவிடர் நல விடுதிகள், 42 பழங்குடியினர் நல விடுதிகள், 301 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் ஆக மொத்தம் 1647 விடுதிகள் மற்றும் பள்ளிகள் இயங்கி வருகின்றன எனவும், அவற்றில் 131915 மாணவ/மாணவியர் தங்கிப் பயின்று வருகின்றனர் எனவும் தெரிவித்திருந்தார். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயன்பாட்டிலுள்ள குழல் விளக்கு, மின் விசிறி, தண்ணீர்க்குழாய் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக நீக்கி பராமரிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகிறது எனவும், இதற்காக ஏற்படும் செலவினத்தினை அவ்விடுதிகள் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்வதனால், மேற்காணும் அவசர, அவசியப் பணிகளை துரிதமாக முடிக்க இயலும் எனவும் தெரிவித்து, மாணாக்கர்களின் நலன் கருதி அப்பணிகளை துரிதமாக முடிக்க ஒரு விடுதிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.15,000/– வீதம் (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) 1647 விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.2.47 கோடி தொடரும் செலவினம் ஏற்படும் எனத் தெரிவித்து, அத்தொகைக்கான நிதி ஒதுக்கீடு செய்து உரிய அரசாணையினை வழங்குமாறு அரசைக் கோரியிருந்தார்.

..2

3. மேற்காணும் ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, இத்துறையின் கீழ் இயங்கும் 1647 ஆதிதிதிராவிடர், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயன்பாட்டிலுள்ள குழல் விளக்கு, மின் விசிறி, தண்ணீர்க்குழாய், சமையல் எரிவாயு இணைப்புக் குழாய், ஆழ்துளைக் கிணறு மோட்டார் ஆகியவற்றினைப் பராமரிக்கும் பொருட்டு ஒரு விடுதிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.15,000/– வீதம் (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ரூ.2,47,00,000/–(ருபாய் இரண்டு கோடியே நாற்பத்திரேழு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி –I திட்டத்தில் சேராதது – AE மாணவர் இல்லங்கள் – 18 பராமரிப்பு – 01 குறித்தக்காலப் பராமரிப்பு"
>
> (து.தொ. கு.2225 01 277 AE 1813)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை விடுதிக் காப்பாளர்கள்/தலைமையாசிரியர்களுக்கு பகிர்ந்தளிக்க ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கும் வகையில் இச்செலவினம் குறித்த கருத்துருவினை நிதித்துறைக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரை இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதித் (வரவு – செலவு பொது – I) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து உடனடி செலவினத்திற்கு தேவைப்படும் தொகையை முன்பணமாக பெற்று படிவத்தில் இவ்வரசாணையின் நகலினையும் இணைத்து நிதித் (வரவு – செலவு பொது – 1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். 2014–2015ஆம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினத்தை சேர்ப்பதற்குரிய விளக்கக் குறிப்பினை நிதித் (வரவு – செலவு பொது –1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேற்காணும் பராமரிப்பு பணிகளுக்கு ஒப்பளித்த தொகை மேற்கண்ட பராமரிப்பு பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் எனவும், இத்திட்டத்தில் செலவினம் போக மீதத்தொகை இருப்பின், அத்தொகையை அரசுக் கணக்கில் உடனடியாக சரண் செய்யப்பட வேண்டும் என ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.2658/நிதித் (ஆதி (ம) பந) துறை/15-1, நாள் 24.01.2015 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2288 (இரண்டாயிரத்து இருநூற்று எண்பத்தி எட்டு)- ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை- 600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை- 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில முதன்மை கணக்காய்வு தலைவர், சென்னை-600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர் - 35/6.
சம்பள கணக்கு அலுவலர் - 5/35.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் அவர்களின் தனிச்செயலர், சென்னை-600 009.
நிதித் (ஆதி (ம) பந) / (வ.செ.பொ.I /வ.செ.பொ.II) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு.1, க.ம.பா, ஆதிந.7, ஆதிந.5) துறை, சென்னை-600 009.
உதிரி/இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.